S.M. Fernando
OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

கண்வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு
அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2028 மாசி 28 வியாழக்கிழமை (11-03-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 104

## அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டு முறிவு:

# தமிழக அரசியலில் நெருக்கடி நிலை!

## இரு கட்சிகளுக்குமே பாதிப்பு

சென்னை, மார்ச் 11

தமிழ்நாட்டில் ஆட்சியில் இருக்கும் அ.தி.மு.கவுக்கும் இந்தியாவில் மத்தியில் ஆட்சியிலிருக்கும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் இருந்து வந்த கூட்டணி உறவு முறிவடைந்திருப்பது தமிழக அரசியலில் பெரும் அரசியல் நெருக்கடியை உருவாக்கியிருக்கிறது.

இந்த உறவு முறிவு இரு கட்சிகளையுமே பெரிய அளவில் பாதிக்கும் என்று அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் சிறுபான்மை அரசு நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கும் இவ்வேளையில், அ. தி.மு. கவின் ஆதரவை அந்த அரசு இழந்திருக்கிறது.

(3ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதாவின் மாநில அரசை கலைக்க காங்கிரஸ் தலைமை முயற்சிக்கலாம்

அ. தி. மு. க. — காங்கிரஸ் கூட்டணி முறிவடைந்திருப்பதை அடுத்து ஜெயலலிதா தலைமையிலான தமிழக மாநில அரசை கலைக்கும் முயற்சியில் காங்கிரஸ் தலைமைப்பீடம் ஈடுபடலாம் எனக் கருதப்படுகிறது.

உறவு முறிவுற்றதை அடுத்து, தமிழக முதல்வர் ஜெயலலிதா, காங்கிரஸுக்கு எதிராகக் கடுமையான போக்கைக் கடைப்பிடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதனை முறியடிக்க, அவரின் அரசைக் கலைக்கும் முயற்சியில் காங்கிரஸ் ஈடுபடும் எனக் கருதப்படுகிறது.

வகுப்புவாத சக்தியான பாரதிய ஜனதாக் கட்சி, தமிழகத்தில் நடத்தத் திட்டமிட்டிருக்கும் பேரணியைத் தடுத்து நிறுத்த ஜெயலலிதா அரசு தவறிவிட்டது என்ற காரணத்தைக் காட்டியும்—

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாக காங்கிரஸ் மற்றும் கட்சியின் தலைவர்கள் அண்மையில் தெரிவித்திருப்பதை தமிழக அரசுக்கு எதிரான குற்றச்சாட்டாகக் காட்டியும்—

தமிழக அரசைக் கலைக்க மத்தியில் ஆட்சியிலிருக்கும் காங்கிரஸ் அரசு நடவடிக்கை எடுக்கக் கூடும் என ஊகிக்கப்படுகிறது.

## அ.தி.மு.கவின் 95 சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழகத்தில் மாற்று அரசு அமைக்க முயற்சி?

தமிழ்நாட்டில் ஒரு மாற்று அரசை அமைப்பதற்கு, மதசார்பற்ற குழுக்களுடன் சேர்ந்து செயற்படத் தாங்கள் தயாராக இருப்பதாக அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் 95 பேர் தம்மிடம் கூறியுள்ளதாக எம். ஜி. ஆர். அ. தி. மு. க. கட்சியை ஆரம்பித்த திரு. திருநாவுக்கரசு பி. பி. ஸி செய்தியாளரிடம் கூறியுள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றம் 234 உறுப்பினர்களைக் கொண்டது.

அதில் காங்கிரஸ் உறுப்பினர்கள் 61 பேர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருநாவுக்கரசின் கூற்று உண்மையாக இருக்குமானால் அ. தி. மு கவின் 95 உறுப்பினர்களும், ஜெயலலிதாவின் அணியை விட்டுப் பிரிந்து காங்கிரஸ் கட்சியின் 61 உறுப்பினர்களுடன் சேர்ந்து தமிழகத்தில் மாற்று அரசு ஒன்றை அமைக்க முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

(உ-5)

## பாண்டிச்சேரியிலும் அரசியல் நெருக்கடி

அ. தி. மு. க. — காங்கிரஸ் கூட்டணியில் ஏற்பட்ட முறிவு பாண்டிச்சேரி அரசியலிலும் எதிரொலிக்க ஆரம்பித்துள்ளது.

காங்கிரஸ் கட்சிக்கு வழங்கி வந்த ஆதரவை அ. தி. மு.க விலக்கிக் கொண்டு விட்டதால் பாண்டிச்சேரியில் உள்ள இந்திரா காங்கிரஸ் அரசு பெரும்பான்மையை இழந்து விட்டதாகவும் —

பாண்டிச்சேரி சட்டசபையில் காங்கிரஸ் அரசு தனக்குள்ள பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்றும் பாண்டிச்சேரி அ. தி. மு. க. பொதுச் செயலாளரும் பாண்டிச்சேரி சட்டசபை எதிர்க்கட்சித் தலைவருமான கணபதி கோரியிருக்கிறார்.

இதேவேளை —

பாண்டிச்சேரி காங்கிரஸ் அரசுக்குப் பெரும்பான்மை இருப்பதாக பாண்டிச்சேரி காங்கிரஸ் தலைவர் பி. சண்முகமும் முதலமைச்சர் வி. வைத்திலிங்கமும் தெரிவித்துள்ளார்.

பாண்டிச்சேரி சட்டசபையின் 30 உறுப்பினர்களில் 15 பேர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றும், இரு சுயேட்சை உறுப்பினர்களின் ஆதரவும் அரசுக்கு உண்டு என்றும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

இதனிடையில் பாண்டிச்சேரி சட்டசபை இம்மாதம் 17 ஆம் திகதி கூடுகிறது.

## பாரதீய ஜனதா - அ.தி.மு.க கூட்டு ஏற்படும்?

புதுடில்லி, மார்ச் 11

"அ.தி.மு.க. வுடன் பாரதிய ஜனதாக் கட்சி கூட்டு வைக்கும் சாத்தியத்தை நிராகரித்து விட முடியாது."

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் திரு. எல். கே. அத்வானி நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸுக்கு வழங்கி வந்த ஆதரவை அ தி மு.க விலக்கிக் கொண்டது. அரசியல் ரீதியிலும் சித்தாந்த ரீதியிலும் விளைவுகளை ஏற்படுத்தலாம் என்றும் அவர் கூறினார்.

(உ-எ)

## ஜெயலலிதா பதவி விலக காங்கிரஸ் கட்சி கோரும்?

காங்கிரஸ் அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை அ.தி.மு.க. அரசு நிறுத்திக் கொண்டதையடுத்து எழுந்துள்ள நிலைமை பற்றி ஆராய காங்கிரஸ் சட்டமன்றக் குழு இன்று புதுடில்லியில் கூடுகிறது.

1991 ஆம் ஆண்டு தேர்தலில் அ.தி.மு.க., காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடனேயே பதவிக்கு வந்தது என்பதால் இப்போது கூட்டணியை முறித்துக் கொண்டதை அடுத்து ஜெயலலிதா பதவியிலிருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கை உட்பட தற்போது எழுந்துள்ள நிலை குறித்து இன்றைய கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில்—

தமிழ் நாட்டைப் பிரதிநிதித்துவப் படுத்தும் இந்திரா காங்கிரஸ் எம். பிக்களின் கூட்டம் ஒன்றை பிரதமர் பி.வி. நரசிம்மராவ் நேற்று இரவு நடத்த இருந்தார்.

கூட்டணி முறிவடைந்ததால் ஏற்பட்டுள்ள நிலைவரம் பற்றி ஆராயவே இக் கூட்டம் அழைக்கப்பட்டது.

(உ-எ-5)

## கூட்டணி உறவு முறிந்தமை மத்திய அரசைப் பாதிக்காது

### காங்கிரஸ் தலைமைப்பீடம் அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 11

இந்திரா காங்கிரஸுடனான கூட்டணியை அ.தி.மு.க முறித்துக் கொண்டது மத்திய அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை எவ்விதத்திலும் பாதிக்காது.

— இவ்வாறு இந்திரா காங்கிரஸ் தலைமைப்பீடம் நேற்று அறிவித்தது.

காங்கிரஸ் பேச்சாளர் வி. என். காட்கில் இதனை வெளியிட்டார்.

அ.தி.மு கவின் முடிவு வருத்தத்திற்குரியது. அதேசமயம், கூட்டணியில் ஒரு தரப்பு அதனை முறிக்கும் போது மறு தரப்பு என்ன செய்ய இயலும்? — என்றும் அவர் கேட்டார்.

அமரர் ராஜீவினால் உருவாக்கப்பட்ட கூட்டணியை முறிக்க அ.தி.மு.க முடிவு செய்த பின்னர் அது பற்றிச் சொல்ல ஒன்றுமேயில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் நாட்டில் பழனி நாடாளுமன்ற இடைத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் போட்டியிடும் என்றும் —

இந்திரா காங்கிரஸ் அரசுடன் கூட்டு வைக்க வேறு கட்சிகள் முன்வந்தால் அது பற்றிப் பரிசீலனை செய்யப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-எ)

### காங்கிரஸ் ஆட்சி கவிழும் ஆபத்தில்லை

## பிரதமர் நரசிம்மராவுக்கு கை கொடுப்பார் அஜித்சிங்!

புதுடில்லி, மார்ச் 11

பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் அரசுக்கு நாடாளுமன்றத்தில் தொடர்ந்து ஆதரவளிக்கப் போவதாக முன்னாள் மத்திய அமைச்சர் அஜித் சிங் தலைமையிலான ஜனதாதள் பிரிவு அறிவித்துள்ளது.

ஜனதாதள் (அஜித் சிங்) கட்சிக்கு லோகசபையில் 20 எம். பிக்கள் உள்ளனர்.

இதனால், 11 எம். பிக்களைக் கொண்ட அ.தி மு க., நரசிம்மராவ் அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை விலக்கிக் கொண்டதால் காங்கிரஸ் அரசு கவிழும் ஆபத்து ஏற்படாது என்று அரசியல் நோக்கர்கள் கருதுவதாக இந்திய வானொலி தெரிவித்தது

(ஒ-எ)

### பழனி மற்றும் ராணிப்பேட்டை

## இடைத்தேர்தலில் அ.தி.மு.க. தனித்தே போட்டியிடும்

### ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை, மார்ச் 11

தமிழ் நாட்டில் விரைவில் நடைபெறவுள்ள பழனி நாடாளுமன்றத் தொகுதியிலும் ராணிப்பேட்டை சட்டசபைத் தொகுதியிலும் அ. தி. மு. க. தனித்துப் போட்டியிடும்.

முதலமைச்சரும் அ. தி மு. க. பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா முன்கண்டவாறு அறிவித்திருக்கிறார்.

காங்கிரஸுடனான அ. தி. மு. க. உறவு முறிந்து விட்டதை அறிவித்து நேற்று முன்தினம் இரவு செல்வி ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டது.

மாநில காங்கிரஸ் தலைவர்களும் பிரமுகர்களும் அ. தி. மு. க. அரசு மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தும்போது, காங்கிரஸ் தலைவரும் பிரதமருமான பி. வி. நரசிம்மராவ் மௌனமாக இருந்து வருகின்றார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

தமிழக அரசியல்
குறித்து
மேலும் செய்திகள்
3ஆம் பக்கத்தில்

## வவுனியா, மன்னாரில் ஊரடங்கு நேற்று நீக்கம்

கொழும்பு, மார்ச் 11

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் அமுல் நடத்தப்பட்டு வந்த ஊரடங்குச் சட்டம் நேற்று நண்பகல் 12 மணியுடன் நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

"சத பஹர" இராணுவ நடவடிக்கையின் போது தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட பகுதிகளில் காவலரண்களை அமைப்பதில் படையினர் நேற்று ஈடுபட்டிருந்தனர் என்றும்—

இராணுவ கொமாண்டோக்களின் 'பூரணச் சந்திரன்' இராணுவ நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகிறது என்றும் கூட்டுப் படைத் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

(உ-ஓ-எ-க)

## தளபதி கிட்டுவின் புகழுடலை கோரும் மனு நிராகரிப்பு

கடந்த ஜனவரியில் தாம் வந்த கப்பலைத் தகர்த்து விட்டு உயிர்நீத்த விடுதலைப் புலிகள் தளபதி திரு. கிட்டுவின் புகழுடலை ஒப்படைக்க வேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்களை சென்னை உயர் நீதிமன்றம் நிராகரித்தது.

தமிழர் தேசியக் கட்சித் தலைவர் ப. நெடுமாறன் தாக்கல் செய்த மனுக்களை விசாரித்த நீதிபதிகள் சிவி வாசன், ஏ. தங்கமணி ஆகியோர் தாங்கள் சம்போசித அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு தகுதியான வழக்கு இது இல்லை என்று தீர்ப்பளித்தனர்.

என்றாலும் —

இது பற்றி விசாரிக்கும் விசாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றத்துக்கு மனுதாரரின் மனுக்கள் அனுப்பப்படும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

(உ-எ)

## கட்டடத் தொழிலாளர்கள் நகரில் நேற்றுப் பேரணி

யாழ்ப்பாணம், மார்ச் 11

சிமெந்துக் கட்டடத் தொழிலாளர்கள் நேற்று யாழ் நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

கட்டடத் தொழிலாளர்கள் வர்ணம் பூசுவோர், மற்றும் அவர்களின் குடும்பத்தவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையானோர் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர்.

யாழ். சென். பற்றிக்ஸ் சந்தியில் உள்ள சிமெந்துக் கட்டடத் தொழிலாளர் சங்கக் கிளை அலுவலகத்தில் இருந்து நேற்றுக் காலை 9மணியளவில் பேரணி ஆரம்பித்தது.

குருசோ வீதி, பழைய பூங்கா வீதியூடாகச் சென்று பேரணி யாழ். உதவி அரச அதிபர் அலுவலகத்தை அடைந்தது. அங்கு பேரணியில் சென்றோர் மகஜர் ஒன்றை யாழ் உதவி அரச அதிபரிடம் கையளித்தனர்.

அங்கிருந்து பேரணி யாழ். அரச செயலகத்தைச் சென்றடைந்தது அங்கு கையளிக்கப்பட்ட மகஜரை யாழ் அரச அதிபரின் சார்பில் மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல், பிரதி மாவட்ட ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

சிமெந்து மற்றும் கட்டட உபகரணங்களை அனுப்புமாறும் — பொருளாதாரத் தடை, தபால் தடை என்பவற்றை நீக்குமாறும் கோரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மகர யாழ் விருதுக்குரிய சான்றோர் தெரிவு ஞாயிறு

யாழ்ப்பாணம், மார்ச் 11

அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர் வழங்கவுள்ள மகர யாழ் விருந்துக்குரிய— சான்றோரை தெரிவு செய்வதற்கான இறுதித் தேர்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற உள்ளது

மக்கள் மத்தியில் திரட்டப்பட்ட கருத்தினை அடிப்படையாகக் கொண்டு இதற்கென நியமிக்கப்பட்ட அறிஞர் குழு இறுதித் தெரிவினை மேற்கொள்ளும் என்று கம்பன் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

தியாகம், தொண்டு மனப்பான்மை, கடமையுணர்ச்சி, இனப்பற்று ஆகியவற்றோடு இளம் தலைமுறைக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து கொண்டு இருக்கும் ஒருவரை தேர்ந்தெடுத்து இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியுள்ள பண முடிச்சு, தங்கப் பதக்கம், வெள்ளிக் கேடயம் உள்ளிட்ட விருதினை வழங்கவுள்ளதாக கம்பன் கழகம் ஏற்கனவே அறிவித்திருந்தது தெரிந்ததே.

அடுத்த மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் முதலாம் நாள் நிகழ்வின்போது மகர யாழ். விருது வழங்கப்படும். (அ)

**உளவாளிகள்!!!**
**அவதானமாக இருக்கவும்...!**
ஈனங் கொடுக்கின்ற தானங்கள் ஏற்காமல்
மானங் கெடுக்கின்ற மாற்றானை
மாய்த்திடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### இலவச திருமண சேவை

32 வயது, R/C, ஆசிரியைக்கு ஏற்ற அரச / கூட்டுஸ்தாபன மணமகன் தேவை. சீதனம் வழங்கப்படும். மணமக்கள் உண்டு. தொடர்பு: ஞாயிறு காலையில் விமலா, யாழ் நாச்சிமார் கோவிலடி.
(24796)

### தபால் வழிக்கல்வி

க. பொ. த. (சா/த) சித்தி அடைந்தவர்கள் பாலர் ஆசிரியராக தபால் வழியிலும், சனி, ஞாயிற்றுக்கிழமைகளில், நேரிலும் பயிற்சி பெறலாம். விவரங்களுக்கு சனிக்கிழமைகளில் முற்பகல் 10.00 மணிக்கு சந்திக்கலாம். பாலர் ஆசிரியர் சங்கம், இல 78, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(24804)

### மீண்டும் ஆரம்பம்

கடிகாரங்கள் திருத்துதல் வேலைகள் மீளவும் (12 - 03 - 1993) வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகின்றது என்பதை "அல்டி" நிறுவனம் தெரிவித்துக் கொள்கின்றது.
(சி 4706)

---

## நிரு
## ரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**A/L 92**

மாணவர்களுக்கான
வினா - விடை
வகுப்பு
நடைபெறுகின்றன.

| | |
|---|---|
| வர்த்தகம் | — தேவா |
| இந்து நாகரிகம் | — சோதி |
| புவியியல் | — வேலா |
| தமிழ் | — குழந்தை |

(சி 4708)

---

I Thank the Lord for the great favour he has granted me.

## OH HOLY SPIRIT

THOU who makes me see everything and shows me the way to reach my ideal Thou who gives me the divine gift to forgive and forget the wrong that is done to me and who are in all instances of my life with me in this short dialogue want to thank Thee for every thing and confirm once more that I never want to be separted from Thee no matter how great the material desire may be I want to be with Thee and my loved ones in your Perpetual Glory Amen. Persons must say this prayer for 3 consecutive days without stating one's wish. After 3 days your wish is granted. Promise to publish the Prayer.

H ZEL
NTHONYPILLAI
(6045)

---

## விவசாய டிப்ளோமா

### ஒரு வருடகால இலவச பயிற்சி நெறி

போதிக்கப்படும் பாடங்கள்:

மிருகபரிபாலனம், பயிர்வேளாண்மை, பூங்கனியியல், விவசாய முலதத்துவங்கள், பண்ணை முகாமைத்துவம், கமப்பொறியியல் (ஆண்கள்), மனைப்பொருளியல் (பெண்கள்), ஆங்கிலம்.

தகைமை: க. பொ. த. (சாதாரண) அல் து தே. க. பொ. த. பரீட்சை சித்தியடைந்திருப்பதுடன் 30 - 04 - 93 இல் வயது 16-25 க்கு இடைப்பட்டு இருக்க வேண்டும்.

**உதவுதொகை வழங்கப்படும்**

விருப்பமுள்ள இருபாலாரும்

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம்.

என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 20 - 04 - 93
(24806)

---

## பாடசாலைகளில்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1-30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு ப. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.
(க-89)

o o o

வட்டுக்கோட்டை துணவி அ. மி. த. க. பாடசாலையின் 1993 இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலைக்கு முன்பாக உள்ள மைதானத்தில் அதிபர் திரு. கா சிவனேசன் தலைமையில் நடைபெறும். (க)

o o o

உசன் கொத்தணிப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான தமிழ்திறன் போட்டிகள் இன்று உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் கொத்தணி அதிபர் க. பேரம்பலம் தலைமையில் நடைபெறும். (ஒ 117)

o o o

கொழும்புத்துறை சென். யோசெப் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு. பி பெனடிக்ற் தலைமையில் நடைபெறும்.
(ஒ-51)

o o o

மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலய பவளவிழா நாளை வித்தியாலய பவளவிழா அரங்கில் அதிபர் திரு. க. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

விழாவில் முதன்மை விருந்தினராக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கலந்து கொள்வார்.
(ஒ-117)

o o o

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பண்ணிசைப் போட்டி யாழ். மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவுப் பகுதியில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 30 மணிக்கு ஆரம்பமாகி நடை

(4 ஆம் பக்கம் பார்க்க)

---

சுழிபுரம் மேற்கு
## ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில்
# சங்காபிஷேகம்
**12 — 03 — 1993** (வெள்ளிக்கிழமை)

காலை:- 8-00 மணி தொடக்கம் சங்காபிஷேகம்
மாலை:- 3-30 மணிக்கு திருக்கல்யாண வைபவம்

மங்கள வாத்தியங்கள்:

| | |
|---|---|
| வி. கே. கானமூர்த்தி | கே. பி. கணேசன் |
| வி. கே. பஞ்சமூர்த்தி | ஆர். பாஸ்கரன் |
| எம் கே. கணேசன் | எம் கே. வீராச்சாமி |

மாலை: 7-30 மணிக்கு சொற்பொழிவு "வள்ளி திருமணம்" சொற் பெருஞ் செல்வன் த. சிவகுமாரன் (ஆசிரியர்)

மாலை:- 9-30 மணிக்கு

★ புல்லாங்குழல் இசை ★
வி. கே. பஞ்சமூர்த்தி
பக்கவாத்தியங்கள் சகிதம்

(24808) - சங்காபிஷேகக் குழு.

---

# நெசவுத் துறையில் வல்லுநர்களை உருவாக்கிய அமரர் பொன்னுத்துரை

ஈழத் திருநாட்டின் கண் வீரத் தமிழ் மன்னராம் வட புலத்திலே நீர்வளம், நிலவளம் மிக்க மட்டுவில் மண் தன்னில் புகழ் பூத்த குடும்பம் ஒன்றில் தம்பிப்பிள்ளைக்கும், பொன்னம்மாவுக்கும் 1917 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 10ஆம் நாள் அருந்தவப் புதல்வராக பொன்னுத்துரை அவர்கள் அவதரித்தார்.

பிறப்பு:
10
10
1917



இறப்பு:
11
09
1992

### த. பொன்னுத்துரை

அன்னார் ஆரம்பக் கல்வியுடன் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றதுடன், ஆசிரிய பயிற்சியும் பெற்று, சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றினார் எனினும் அவர் மனம் அமைதி அடையவில்லை.

"செய்யும் தொழில் எல்லாம் -
சீர்தூக்கிப் பார்க்கின்
நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை"

—எனனும் வாசகுககு அமைய ஆசிரிய தொழிலை கைவிட்டு இத்தொழிலை வெகு

**அமரர் தம்பிப்பிள்ளை பொன்னுத்துரை அவர்களின் 6 ஆம் மாத நினைவுச் சிந்தனை மலர்**

சீக்கிரத்தில் திறம்படக் கற்று அவற்றால் ஏனையோரும் முன்னேற வேண்டும் என்னும் நோக்கத்திற்கிணங்க இருபத்தைந்தாம் வயதில் நெசவு ஆசிரியர் பணியுடன் தம்மை இணைத்துக் கொண்டார்.

இவர் இளமையாய் இருக்கும் போதே தெய்வ பக்தியும் ஒழுக்கமும், மற்றோரை மதித்து அன்புடன் பழகும் சுபாவமும் மிக்கவராக விளங்கினர் யாழ் குடா நாட்டின் பலபகுதிகளிலும் தமது நெசவு ஆசிரிய பணியைச் சாதனையாலும், போதனையாலும் எழுச்சி பெறச் செய்தார். சமுதாயத்துக்குச் சேவை செய்யும் அவாவுடன் ஏனையோர்கள் இத்தொழிலில் முன்னேற மிகவும் பாடுபட்டார்.

அத்தொன்டு மட்டும் அவருக்குப் புகழைத்தேடித்தரவில்லை நல்லூர் நெசவு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இவர் அயராது ஆற்றிய உழைப்பின் சேவையை தற்போது புடைவைக் கைத்தொழில் திணைக்களத்திலும், யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசத்திலும் மற்றும் பல தனியார் ஆலைகளிலும் சிறந்த வல்லுநர்களாக சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருப்பதை இன்று கண்கூடாகக் காண்கின்றோம்.

இத்துறையில் 1953ஆம் ஆண்டு முதல் 1967ஆம் ஆண்டு வரை பல மாணவர்களை பயிற்றுவித்து தொழில் நுட்பங்களைப் புகுத்தியதுமல்லாமல் அவர்களை ஊக்குவித்து மேலதிகப் பயிற்சி பெற வெளிநாடுகளுக்கு அனுப்பி நெசவுத்துறையில் வல்லுநர் ஆக்கியமை சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மேலும் இப்புனித சேவையை யாழ் மாவட்டத்துடன் மட்டும் நிறுத்தாது தமிழர் வாழ் பகுதிகளாகிய முல்லை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் தன்வலம் கருதாது பணி புரிந்தார். இவரின் இவ் அரும்பெருஞ் சேவையின திறன் கண்டு புடைவைக் கைத்தொழில் திணைக்களம் நெசவு டிசைன், நுட்பத்திறன் ஆகியனவற்றில் மேலதிகப் பயிற்சி பெற வெலோனாவுக்கு அனுப்பியதுமல்லாமல் 1968ஆம் ஆண்டிலிருந்து நெசவு மேற்பார்வையாளராகப் பதவி உயர்வையும் வழங்கியது. இப்பதவியில் 1973 ஆம் ஆண்டு வரை சேவையாற்றி ஒய்வினைப் பெற்றார்.

அன்னார் தமது 33 ஆம் வயதில் சிவஞானம்மாவைத் துணைவியாராக்கிக் கொண்டார். விஜயலட்சுமியும், விஜயராணியும் இன்பமாய் வாழ்ந்து இனிநுறப் பெற்ற மக்களாய் வாய்த்திட மகிழ்ச்சியே அடைந்தார். அதுவுமல்லாமல் அவர்களையும் பிரியமுடன் பேணி வளர்த்து, அவர்கள் கல்விக்காக ஓயாதுழைத்து சிறந்த ஆசிரியர்களாக ஆக்கியுள்ளார்.

மானுடனாக வாழும் காலம் ஒருவன் தனது பெற்ற தாய்க்கும், பிறந்த மண்ணுக்கும் ஆற்றும் நற்சேவை காலத்தின் கண்ணாகக் கணிக்கப்படும் இந்த வகையில் அமரர் பொன்னுத்துரை அவர்கள் தமது வாழ்நாளில் முப்பது ஆண்டுகள் சேவையாற்றி ஓய்வு பெற்றமை அவரின் கடமைத் திறனை நன்கு புலப்படுத்துகின்றது.

இவ்வாறு பல்துறையிலும் சுடர்விட்டுப் பிரகாசித்த நிபம் தமது 75ஆவது வயதில் 11 - 09 - 1992 அன்று அணைந்துவிட்டது அவரின் பணி சிறந்து விளங்கியமையால் அவர் இன்றும், என்றும் எல்லோராலும் மதிக்கத்தக்க ஒரு மாணிக்கமாக விளங்குகிறார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள்-
வைக்கப்படும்"

எனும் பொன்மொழிக்கிணங்க அன்னார் வாழ்வில் அவர் ஆற்றிய சேவைகள் காலத்தால் போற்றப்படும். தெய்வத்துள் சங்கமமாகிய அன்னாரின் 6ஆம் மாத நினைவுகளில் அவர் தம் குடும்பத்தாருடன் நாமும் அவரின் புகழ் போற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

**செ. சிவலிங்கம்**
கைத்தறி உற்பத்தி முகாமையாளர்
(யாழ் மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்)

(21781)

---

# அரசாங்க அறிவித்தல்

## சுகாதார சேவைகள் திணைக்களம்- யாழ்ப்பாணம்

### துணை வைத்திய சேவை மற்றும் நடுத்தர தொழில்நுட்பவியலாளர் சேவைகளுக்கான பயிலுநர்கள் தெரிவு - யாழ்ப்பாண மாவட்டம்

1989ஆம் ஆண்டு நடத்தப்பட்ட விசேட பரீட்சை மற்றும் 1992 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்படி சேவைகளுக்கான பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை ஒன்று கீழ்க் குறிப்பிடப்படும் பரீட்சார்த்திகளுக்கு 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் பணிமனையில் நடத்தப்படும்.

**1989 விசேட பரீட்சை**

| | பெயர் | விலாசம் |
|---|---|---|
| 01. | செல்வி அர் சிறிரஞ்சனி | நாவற்குழி, கைதடி. |
| 02. | செல்வி எஸ். சிவசக்தி | கேரதீவு றோட், நாவற்குழி - கைதடி |
| 03. | திரு. ஏ லோகநாதன் | கைதடி கிழக்கு, கைதடி. |
| 04 | திரு பீ. பாலசுப்பிரமணியம் | பழைய வீதி, சோப்பாய் தெற்கு, கோப்பாய். |
| 05. | செல்வி எஸ். யோகராணி | ஆனைக்கோட்டைவீதி, கொக்குவில் மேற்கு. கொக்குவில் |
| 06. | செல்வி பி. மஞ்சுளா | 20/1, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். |
| 07. | செல்வி வானதி கிருஷ்ணன் | கனகம்புளியடி, சாவகச்சேரி. |
| 08. | செல்வி ரி வாகினி | மே/பா வி அழகரத்தினம், முருகன் வீதி, உரும்பராய். |
| ★ 09. | செல்வி எம். வரைமகள் | 'துளசி' வேலணை மேற்கு, வேலணை. |
| 10. | செல்வி கே. தர்மேஸ்வரி | 'சிவபவனம்' தெணியம்மன் வீதி, பருத்தித்துறை. |
| 11. | திரு. என். கோகுலரஞ்சன் | 93ஏ, கண்டி வீதி, யாழ்ப்பாணம் |
| 12. | திரு. வி. எஸ். பத்மநாதன் | சாவகச்சேரி வடக்கு, மீசாலை. |
| 13. | திரு. என். மகேந்திரன் | சாரதா ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரி. |

**1992 போட்டிப்பரீட்சை:**

| | பெயர் | விலாசம் |
|---|---|---|
| 01. | திரு. ஜி சிறீகாந்தன் | 126/7, அரசடி வீதி, யாழ்ப்பாணம் |
| 02. | திரு. வி. ஜெயராஜா | 'மாதவன்' நீர்வேலி வடக்கு, நீர்வேலி. |
| 03 | திரு. ரி. புவனேந்திரன் | 'கௌரி வாசம்' பாடசாலை ஒழுங்கை, இணுவில் மேற்கு, சுன்னாகம். |
| 04. | திரு. வி குகனேசன் | வட்டு. கிழக்கு. கலைநகர், சித்தன்கேணி. |
| ★ 05. | திரு. எஸ். தேவகுமாரன் | கம்பனை, தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளை. |
| 06. | திரு. வி. சுந்தரராஜன் | மே/பா, பி. வல்லிபுரம், இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, யாழ்ப்பாணம். |
| 07. | திரு எஸ் இராஜதுரை | சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை. |
| 08. | செல்வி எஸ். சற்குணதேவி | 105 4 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். |
| 09. | திரு எஸ். அருட்செல்வன் | இராமலிங்கம் வீதி, கல்வயல், சாவகச்சேரி. |
| ★ 10 | திரு வி சுரேஷ் | 78, கல்லூரி வீதி, காங்கேசன்துறை |
| ★ 11. | திரு. எஸ். சிவராஜா | கிருஷ்ணன் கோவில் வீதி, மூளாய், சுழிபுரம் |
| 12. | செல்வி எஸ். அனுராதா | 2ஏ, மருதடி வீதி, யாழ்ப்பாணம். |
| 13. | செல்வி கே அனுராதா | தவசிக்குளம், மிருசுவில். |
| 14. | திரு. எஸ். திருமாறன் | அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. |
| 15. | செல்வி எஸ். எழிலரசி | கோணாவளை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். |
| 16. | செல்வி எஸ். நாகராணி | 37, 2ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம். |
| 17. | செல்வி பி. மோகனாம்பாள் | 104/6, அத்தியடி, யாழ்ப்பாணம். |
| 18. | செல்வி பி வசந்தநாயகி | 6, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். |
| ★ 19. | திரு. எஸ். சிவமோகன் | சேச் ஒழுங்கை, மூளாய், சுழிபுரம். |

2. நேர்முகப் பரீட்சைக்காக மேற்குறித்த சகல பரீட்சார்த்திகளுக்கும் தனித்தனியே கடிதங்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன எனினும் ★ அடையாளமிட்டவர்களின் கடிதங்கள் இப் பணிமனையில் வைக்கப்பட்டுள்ளன. அவர்கள் வேலை நாளொன்றில் காலை 8-30 தொடக்கம் பி. ப. 4-15வரை நேரில் வந்து தமது கடிதங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3 நேர்முகப் பரீட்சைக்கான கடிதத்தின் 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் மூலப் பிரதிகளுடன் ஒவ்வொன்றினதும் ஒளிப்படப் பிரதி ஒன்றினையும் கொண்டுவருமாறு சகல பரீட்சார்த்திகளும் கேட்கப்படுகின்றனர்.

நன்றி.

பொ. இரத்தினசபாபதி.
பிராந்திய பணிப்பாளர்,

10 - 03 - 1993. (சி-4668)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# பொறுப்புணர்ந்து செய்யும் பணி

பருத்தித்துறை துறைமுகத்தில் ஒரு வாரத்தில் மூவாயிரத்து இருநூறு தொன் உணவுப் பொருள்கள் இறக்கப்பட்டிருக்கின்றன. இது வழமையைவிட மிக அதிகமானது என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

பருத்தித்துறை துறைமுகம் கொழும்பைப் போலவோ, ஆகக் குறைந்தது காங்கேசன் துறைமுகத்தைப் போலவோ வசதியுள்ள ஒன்றல்ல. நீண்ட காலமாகப் பாவிப்பில் இல்லாதிருந்தது. உரிய முறையில் அது புனரமைக்கப்பட்டதும் அல்ல, அபிவிருத்தி செய்யப்பட்டதும் அல்ல.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான தரைவழிப்பாதை தடைப்பட்டதைத் தொடர்ந்து, காங்கேசன் துறைமுகம் ஊடாகவும் பொருள்களைக் கொண்டுவர முடியாத சூழ்நிலையில், பருத்தித்துறையே கைகொடுத்து உதவுகிறது. ஆனால் குடாநாடு முழுவதற்கும் தேவையான உணவுப் பொருள்களை இறக்கி ஏற்றுவதற்கான அடிப்படை வசதிகள் அங்கு இல்லை.

பூரணமான இறங்குதுறை இல்லை. உணவுப் பொருள்களை ஏற்றி இறக்குவதற்குத் தேவையான மிதவைப்படகுகள், இழுவைப் படகுகள், பாரம் தூக்கிகள் என்பன போதிய அளவில் இல்லை. நவீன தொழில்நுட்ப வசதிகள் இல்லை. சகல வேலைகளும் உடல் உழைப்பு ரீதியானதாகவே இருக்கிறது.

இத்தகைய வசதியீனங்களின் மத்தியிலேயே, கடந்த சுமார் இரண்டு வருடங்களாக குடாநாடு முழுவதற்கும் தேவையான உணவு மற்றும் அத்தியாவசிய பாவனைப் பொருள்கள் பருத்தித்துறையில் வைத்து இறக்கப்படுகின்றன. சுருங்கக் கூறின் துறைமுகத்தில் பணிபுரியும் ஊழியர்களின் கடும் உழைப்பும், கடமை உணர்வுமே கப்பலில் வந்து சேரும் பொருள்கள் மக்களுக்குக் கிடைக்கக் காரணமாக உள்ளன.

அவர்கள் தமது பொறுப்பை உணர்ந்து, வெறும் சம்பளத்துக்கு வேலை செய்யும் தன்மையை நீக்கி, மக்களுக்கு ஆற்றும் சமூகப்பணியாகக் கருதி கண்ணும் கருத்துமாகக் கஷ்டப்பட்டுத் தமது உடல் உழைப்பை நல்காதிருப்பின் —

எத்தனையோ காரணங்களைக் கூறி யாழ்ப்பாண மாவட்ட மக்களைப் பட்டினி போட்டு வாட்டும் அரசாங்கம், பொருள்கள் இறக்கும் வசதி இல்லை என்ற நொண்டிச் சாட்டைக் கூறி உணவு அனுப்புவதையே முற்றாக நிறுத்தி விட்டிருக்கவும் கூடும்!

வழமையாகப் பன்னிரண்டு நாட்களில் இறக்கப்படும் தொகையை பருத்தித்துறை துறைமுக ஊழியர்கள் ஒரு வாரத்தில் இறக்கிவிட்டார்கள்! நாளாந்தம் சராசரி 500 மெற்றிக் தொன்களுக்கு மேல் இறக்கி உள்ளார்கள். இறங்குதுறையில் இருந்து மிகத் தொலைவில் தங்கி நிற்கும் மூன்று கப்பல்களில் இருந்தும் ஒரே சமயத்தில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்களின் தேவை அறிந்து, அவசரம் தெரிந்து பொறுப்புடன் பணியாற்றும் பருத்தித்துறை துறைமுக ஊழியர்களின் பணி பாராட்டுக்குரியது. அவர்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்தும் நிர்வாகத்தினருக்கும் மக்கள் சார்பில் நன்றி தெரிவிக்க வேண்டும்.

மக்கள் தேவை அறிந்து, தமது கடமைகளைப் பொறுப்புணர்ச்சியோடு ஆற்றும் அவர்களது பணி, குடாநாட்டின் ஏனைய சகல பணியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஒரு சிறந்த உதாரணமாகவும் முன்னோடியாகவும் அமைகிறது.

## இன்று

பல்கலைக்கழக புவியியல் துறை மாணவர்களுக்கான "நகர்ப்புற சுகாதார செயற்பாடுகள்" என்ற தலைப்பிலான சுகாதாரக் கருத்தரங்கு இன்று பி. ப. 2 மணிக்கு யாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனையில் நடைபெறும். (ஓ-162)

## நாளை

சாளரம் வெளியீட்டாளர்கள், உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் உயர் தர மாணவர் மன்றத்தினரின் ஆதரவுடன் நடத்தும் இலக்கிய, கவிதா நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி அதிபர் திரு. ந. அனந்தராஜ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் கவிஞர் சோ. பத்மநாதன் கவிதை பற்றி சிறப்புரையாற்றுவார். (ஓ)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ். செயலக நலன்புரிச் சங்கமும், யாழ். இலக்கிய வட்டமும் இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா நாளை பிற்பகல் 2 30 மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறும்.

இடம் பெயர்ந்த பனை தென்னை தொழிலாளர்களின் மீளக் குடியமர்த்தல் தொடர்பான கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு இணையப் பணிமனையில் நடைபெறும். இதில் பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தினர் மற்றும் இணையத்தில் அங்கம் வகிக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றுவர். (ஓ 162)

## ஓய்வூதிய வவுச்சர்கள் தபாலில்

யாழ்ப்பாணம், மார்ச் 11

மார்ச் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் யாழ். செயலகத்தினால் நேற்று தபாலில் சேர்க்கப்பட்டன.

இதே வேளை—

உள்ளூராட்சி மன்றங்களில் இருந்து ஓய்வு பெற்றோரின் மார்ச் மாத ஓய்வூதிய வவுச்சர்களும் நேற்று தபாலில் சேர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-100-162)

## காரைநகர் வாசி கைது

கொழும்பு, மார்ச் 11

குண்டு தயாரிப்பதில் நிபுணராகக் கருதப்படும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் கொழும்பு - எக்கலையில் வைத்து கைது செய்யப்பட்டார் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

காரைநகரைச் சேர்ந்த இவர், கொழும்பில் உளவு பார்க்க வந்ததாகவும் —

எக்கலைப்பகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இருப்பதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து பொலீஸார் நடத்திய தேடுதலின் போது இந்த நபர் கைது செய்யப்பட்டார் என்றும் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஓ-எ)

## வாசுவின் கட்சி சேராது

கொழும்பு, மார்ச் 11

சுதந்திரக்கட்சி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சிகள் கூட்டு முன்னணியில் நவசமசமாஜக் கட்சி சேராது.

இத்தகவலை அக்கட்சியின் தலைவரும் இரத்தினபுரி மாவட்ட எம். பியுமான திரு. வாசுதேவ நாணயக்கார நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

## ஆலயங்களில்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில், நாளை பிற்பகல் 2-30 மணிக்கு திரு. சு. சிவகுருநாதன் "நன்றிக்கடன்" என்பது பற்றி உரை நிகழ்த்துவார். (க)

## படகு உரிமையாளர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 11

இளாலி - பூநகரி படகுச் சேவையில் ஈடுபட்டுள்ள படகு உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 2 மணிக்கு இளாலித் துறையில் நடைபெறும்.

சகல உரிமையாளர்களையும் அங்கு வருமாறு விடுதலைப் புலிகள் யாழ் மாவட்ட நிதித்துறை வருவாய்ப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (ஓ)

# தமிழக அரசுக்கு மத்திய அரசு மறைமுகமாக எச்சரிக்கை!

புதுடில்லி, மார்ச் 11

சென்னையில் பாரதிய ஜனதாக்கட்சி நடத்தத்திட்டமிட்டுள்ள பேரணியை தடுக்கும் ஒரு நடவடிக்கையாக மறைமுக எச்சரிக்கை ஒன்றை தமிழக அரசுக்கு இந்திய மத்திய உள்துறை அமைச்சு விடுத்துள்ளது.

நாட்டில் வகுப்புவாத சக்திகளுக்கு மத்திய அரசு விதித்துள்ள தடை உத்தரவை மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் சரியான முறையில் அமுல் நடத்த வேண்டும் என்று உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

இம்மாதம் 21ஆம் திகதி பாரதீய ஜனதாக் கட்சியின் பேரணி சென்னையில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பேரணியைத் தடை செய்ய தமிழக அரசு இன்னும் நடவடிக்கை எடுக்காதது உள்ளதாகக் கூறப்படும் இவ்வேளையில், மத்திய உள்துறை அமைச்சு முன்கண்ட உத்தரவை வெளியிட்டுள்ளது.

மத்திய அரசின் தடை உத்தரவு மாநிலங்களில் சரியாக அமுல் நடத்தப்படுகின்றதா என்று உள்துறை அமைச்சு மாநிலத் தலைமைச் செயலாளர்களிடம் இருந்து அறிக்கை கோரியுள்ளது.

தடை உத்தரவை சொல்லிலும் செயலிலும் அமுல் நடத்துவதில் உள்ள அசௌகரியங்களைச் சமாளிப்பதற்குத் தேவையான உதவிகளை மத்திய அரசு வழங்கும் என்றும் உள்துறை அமைச்சு மாநிலத் தலைமைச் செயலாளர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளது.

பிந்திய செய்தி

இதற்கிடையில்—

இம்மாதம் 21ஆம் திகதி சென்னையில் பாரதீய ஜனதாக் கட்சியின் பேரணியைத் தடை செய்யும்படி தமிழக அரசை மத்திய அரசு கேட்கும்.

மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் ராஜ்ய சபையில் நேற்று இதனைத் தெரிவித்தார்.

தடைவிதிப்பது பற்றி தமிழக அரசுதான் முடிவு எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ஓ-எ)

### கிழிக்கப்பட்ட நிலையில் கடிதங்கள்:

# வெளிநாட்டுத் தபால்களில் வந்த கரன்ஸிகள் மாயம்

## ஆனால் காசோலைகள் இருக்கின்றன

யாழ்ப்பாணம், மார்ச் 11

குமண கப்பலில் எடுத்து வரப்பட்ட 220 தபால் பொதிகளும் நேற்றுத் தொடக்கம் தரம் பிரித்து விநியோகிக்கப்படுகின்றன.

இக்கப்பலில் எடுத்து வரப்பட்ட வெளிநாட்டுத் தபால்களில் 75 வீதமானவை — பல்லாயிரக்கணக்கானவை — கிழிக்கப்பட்ட நிலையில் வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழிந்த நிலையில் வந்துள்ள வெளிநாட்டுக் கடிதங்களில் — முக்கிய ஆவணங்களைக் கொண்டிருப்பவற்றை மட்டும் — உரியவர்களை தபாலகத்துக்கு அழைத்து அவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதேசமயம் —

கிழிக்கப்பட்ட கடிதங்களுக்குள் இருந்த வெளிநாட்டுப் பணநோட்டுகள் (கரன்ஸிகள்) அபகரிக்கப்பட்டிருப்பதாகவும்—

ஆனால், வெளிநாட்டுக் காசோலைகள் அபகரிக்கப்படாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கான வெளிநாட்டுத் தபால்களை கொழும்பில் வைத்துப் படையினர் கிழித்துச் சோதனையிட்டு வருவது தெரிந்ததே. யாழ்ப்பாணத்துக்கு கடந்த நான்கு மாதங்களாக வெளிநாட்டுத் தபால்கள் வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-17-162)

## தொழில்நுட்ப பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக்கல்லூரி ஆண்டு இறுதிப் பொதுப் பரீட்சை முடிவுகள் சில வெளியிடப்பட்டுள்ளன.

மின்சாரப் பொறியியல் துறையில் 3 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளார்கள். 4 பேர் நூனசித்தி அடைந்துள்ளனர்.

லத்திரனியலில் 9 பேர் சித்தி பெற்றுள்ளனர், 4 மாணவர்கள் நூனசித்தி அடைந்துள்ளனர்.

இப்பரீட்சைகளுக்கு மொத்தம் 45 மாணவர்கள் தோற்றியிருந்தனர். (அ-17)

### தொழில் நுட்பக் கல்லூரி

# 6 விரிவுரையாளர் திடீரென கிழக்கே இடமாற்றம்

## மாணவர் அரச அதிபருக்கு மகஜர்

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த ஆறு விரிவுரையாளர்கள் கல்வி ஆண்டின் இடை நடுவில் ஒரே முறையில் சம்மாந்துறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனால் தாம் மிகப்பெருமளவில் பாதிக்கப்பட உள்ளதாகவும், அத்தகைய நிலையை நீக்குவதற்கு இடமாற்றத்தை ரத்துச் செய்வதற்கு உதவுமாறும், தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் யாழ். அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது சம்பந்தமாக மாணவர்கள் நேற்று அரசாங்க அதிபரைச் சந்தித்து மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

உயர்கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு தமது கல்வி இடைநடுவில் பாதிக்கப்படாமல் இருக்க உதவுமாறு அந்த மகஜரில் மாணவர்கள் கேட்டிருக்கின்றனர்.

★ இப்படியான திடீர் மாற்றங்களினால் தான் எமது பரீட்சைகளில் நாம் திறமையான சித்திகளைப் பெறவோ அல்லது சாதாரண சித்திகளைப் பெறவோ தடையாக இருப்பதாக நாம் உணர்கின்றோம். இதற்கு கடந்தகால பெறுபேறுகள் ஆதாரமாக உள்ளன. கல்வியில் ஏற்படுத்தப்படும் இப்படியான குறுக்கீடுகளும் காலதாமதங்களும் தவிர்க்கப்படல் வேண்டும்.

★ எமக்கு இருப்பதோ இங்கு ஒரே ஒரு தொழில்நுட்பக் கல்லூரி. இந்நிலையில் இங்குள்ள போதனாசிரியர்கள், விரிவுரையாளர்களை ஒரே முறையில் இடமாற்றம் செய்யும்போது வேறு தொழில்நுட்பக் கல்லூரிகளிலிருந்தோ அன்றி வேறு உயர் கல்வி நிறுவனங்களில் இருந்தோ எமக்கு போதனை நடத்த அனுபவம் வாய்ந்தவர்கள் எவரும் வரப் போவதில்லை. இதற்கு இங்குள்ள தற்போதைய நெருக்கடி நிலை ஏதுவாக உள்ளது.

— என்று அந்த மகஜரில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# ஜெயலலிதாவின் அறிவிப்பு ஆச்சரியத்தை தரவில்லை

## வாழப்பாடி கூறுகிறார்

சென்னை, மார்ச் 11

கூட்டணி முறிந்து விட்டதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்திருப்பது குறித்து தனது கட்சி கவலைப்படவுமில்லை; ஆச்சரியப்படவுமில்லை என்று தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி குறிப்பிட்டிருக்கிறார்.

செல்வி ஜெயலலிதா தாம் மத சார்பற்றவர் என்று பாவனை செய்து வருவது போலியானது என்பதை இந்த அறிவிப்பின் மூலம் தெளிவாக்கியிருக்கிறார் என்றும் வாழப்பாடி குறிப்பிட்டார். (உ-க)

## சுவாமி வரவேற்பு

புதுடில்லி, மார்ச் 11

காங்கிரஸ் - அ. தி. மு. க. கூட்டு முறிவடைந்ததாக முதலமைச்சர் ஜெயலலிதா வெளியிட்ட அறிவிப்பை ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி வரவேற்றார்.

செல்வி ஜெயலலிதாவின் முடிவு தவிர்க்க முடியாத ஒன்றாகும் என்று அவர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

"அ. தி. மு. க — காங்கிரஸ் கூட்டு முறிந்ததான அறிவிப்பு எதிர்பார்த்த ஒன்றேயாகும்"—

தி. மு. க தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான திரு. மு. கருணாநிதி முன்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை - காங்கிரஸுடனான அ. தி. மு. க. உறவு முறிந்து விட்டதாக செல்வி ஜெயலிதா வெளியிட்ட அறிக்கை குறித்து இந்திரா காங்கிரஸ் பேச்சாளர் வி. என். காட்கிலும் தமிழக காங்கிரஸ் பிரமுகர் ஜி. கே. மூப்பனாரும் கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டனர். (ஓ-எ)

## பிற தலைவர்களின் கருத்து

சென்னை, மார்ச் 11

அ. தி. மு. க. — காங்கிரஸ் கூட்டணி முறிந்தமை குறித்து பல்வேறு கட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துகள் வருமாறு:-

### வி. பி. சிங்

சென்னைக்கு நேற்று விஜயம் செய்த முன்னாள் பிரதமரும் ஜனதாதள் தலைவருமான திரு வி. பி. சிங் "முறிந்து போன அ. தி. மு. க — காங்கிரஸ் கூட்டணி, சந்தர்ப்பவாத அரசியல் உறவில் உருவான ஒன்றாகும்.

அது உருவானதிலோ அல்லது உருக்குலைந்து போனதிலோ வியப்பு ஏதும் இல்லை" — என்று குறிப்பிட்டார்.

### கம்யூனிஸ்ட் பிரமுகர்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் இந்திரஜித் குப்தா—

"பாரதிய ஜனதாக் கட்சியுடன் கூட்டணி ஒன்றை அமைத்துக் கொள்ள முதலமைச்சர் ஜெயலலிதா முயற்சித்து வருகிறார்". "இப்புதிய கூட்டணி நாட்டில் மதசார்பின்மைக்கு ஓர் அச்சுறுத்தலாகவே அமையும்" என்றார்.

### ஹரிகிஷன்

"அ. தி. மு. க தனது ஆதரவை விலக்கிக் கொண்டதால் நரசிம்மராவின் அரசு பலவீனமடைந்து விட்டது" — என்று வி. பி. சிங் தலைமையிலான ஜனதாதள் கட்சியின் பேச்சாளர் ஹரிகிஷன் சுர்ஜித் தெரிவித்தார். (உ-எ)

தமிழக..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது, வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு நரசிம்மராவ் அரசுக்கு நெருக்கடியைத் தருவதாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

எனினும்—

பிரதான எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சி நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தக் கோரிவரும் இவ்வேளையில்—

பாரதீய ஜனதாவின் பொதுத் தேர்தல் கோரிக்கையை எதிர்த்து வரும் ஏனைய எதிர்க்கட்சிகள் வரவு-செலவுத் திட்டப் பிரேரணையில் நரசிம்மராவ் தோற்று, அதனால் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு வழி அமைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக வரவு-செலவுத் திட்டப் பிரேரணையின் போது நரசிம்மராவ் அரசுக்கு ஆதரவாக வாக்களிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் கூட்டணி முறிவு நரசிம்மராவ் அரசை உடனடியாகப் பாதிக்காது என்று கருதப்படுகிறது.

## சார்க் மாநாடு ஏப் 10, 11இல்

கொழும்பு, மார்ச் 11

ஒத்திவைக்கப்பட்ட சார்க் உச்சி மாநாட்டை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10, 11ஆம் திகதிகளில் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அனைத்து சார்க் நாடுகளின் தலைவர்களும் புதிய திகதிகளில் உச்சி மாநாட்டை நடத்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர் என அறிவிக்கப்படுகின்றது. (த-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகளில்---

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பெறும்.

கோட்ட மட்டப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றோர் இதில் கலந்து கொள்வர். வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு இ சுந்தரலிங்கம் பி. ப. 2 00 மணிக்கு வழங்குவார்.

(ஓ)

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய பரிபாலனசபை

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

ஏற்கனவே 13 - 03 - 1993 ஆம் திகதி உதயன் பத்திரிகை மூலம் அறிவித்தபடி மேற்படி கூட்டம் 14 - 03 - 1993 ஆம் திகதி மாலை 3 - 30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளதால், சகல பொதுச்சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

- செயலாளர்.

(24809)

## அறிவித்தல்

### புங்குடுதீவு - நயினாதீவு
### ப. நோ. கூ. சங்கம் (வ. து.)

சகல அங்கத்தவர்களுக்கும்,

பங்குப் பணம் ரூபா 00/-

06 - 03 - 1992 இல் திருத்தி அமைக்கப்பட்ட கூட்டுறவுச் சட்டத்தின் படி உப விதி 18 (1) அமைவாக ஒரு பங்கின் பெறுமதி ரூபா 100/- ஆகும். எனவே சகல அங்கத்தவர்களும் தமது பங்கினை ரூபா 100/- ஆக வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் தவறும் பட்சத்தில் கிளைக் குழு தேர்தலிலோ பொதுச் சபையிலோ நெறியாளர் குழுவிலோ பிரதிநிதித்துவம் வகிக்க முடியாது. எனவே தங்கள் பங்குப் பணத்தை ரூபா 100/- ஆக ஆக்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

குறிப்பு: தலைமைக் காரியாலயம் 201/1, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் காரியாலய நாட்களில் முற்பகல் 9-00 மணி தொடக்கம் நண்பகல் 12-00 மணி வரை பங்குப் பணத்தை செலுத்தி பற்றுச் சீட்டை பெற்றுக்கொள்ளவும்.

செயலாளர் — தலைவர்

(சி/4669)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மாவிட்டபுரம்

### அமரர் ஆ. க. சின்னத்தம்பு

தோற்றம்: 1902 — 10 — 11
மறைவு: 1993 — 02 — 09

ஆங்கீ ரசத்தையில் ஆய திருதிகையில்
ஓங்குபுகழ்ச் சின்னத்தம் பாமதிருள் — தாங்கும்
முருகனடி சேர்ந்திட்டான் அன்னவனின் பண்பால்
உருகிடுமே எங்கள் உளம்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"கார்த்திகை"
நவாலி வீதி.
ஆனைக்கோட்டை.

(24811)

# ஆஸ்பத்திரி 'எக்ஸ்றே' பிரிவு ஸ்தம்பிக்கும் அபாயம்

## பிலிம்கள் வந்து சேரவில்லை

யாழ்ப்பாணம், மார்ச். 11

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை 'எக்ஸ்றே' பிரிவு ஸ்தம்பிக்கும் அபாயம் உருவாகி உள்ளதாகச் சொல்லப்படுகிறது.

''எக்ஸ்றே'' படம் எடுப்பதற்குத் தேவையான பிலிம்கள் போதிய அளவு இல்லாதிருப்பதே இந்த நிலைக்குக் காரணம் என்று வைத்தியசாலை ''எக்ஸ்றே'' பிரிவு வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

1993 ஆண்டின் முதலாவது காலாண்டுக்குத் தேவையான ''எக்ஸ்றே'' பிலிம்களில் 25 சத வீதம் மட்டுமே ஜனவரியில் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டது.

அவ்வாறு குறைந்த அளவில் அனுப்பப்பட்ட பிலிம் ஒவ்வொன்றையும், எடுக்கப்படும் படங்களின் அளவைப் பொறுத்து 2, 4, 6 துண்டுகளாக வெட்டியே இதுவரை பாவிக்கப்பட்டு வந்தது.

இக்காலாண்டுக்குரிய மிகுதி 75 வீதமான பிலிம்களும் இம்முறை குமணவில் வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வரவில்லை.

அதன் காரணமாக கையிருப்பில் உள்ள மிகச் சொற்ப எண்ணிக்கையான பிலிம்களைக் கொண்டே சமாளிக்க வேண்டி உள்ளதாகவும்—

பிலிம்களை வெட்டிப் பாவிப்பதானாலும் அவசர நோயாளருக்கு மட்டுமே 'எக்ஸ்றே' எடுக்க முடியும் என்றும்—

கிளினிக் நோயாளருக்கு 'எக்ஸ்ரே' படம் எடுப்பதை மட்டுப்படுத்த நேரிடும் என்றும்—

இன்னும் இரண்டொரு வாரங்களில் ''எக்ஸ்றே பிலிம்'' கொழும்பிலிருந்து வந்து சேராவிட்டால் ''எக்ஸ்றே'' பிரிவு முற்றாகவே ஸ்தம்பிக்கும் அபாயம் உண்டு என்றும் — சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ-15)

# தெரிவுக் குழு இன்று கூடும்

மூன்று மாதங்களின் பின் நாடாளுமன்றத் தெரிவுக்குழு இன்று கூடவிருக்கிறது.

இந்தியாவில் காணப்படுவது போன்ற அதிகாரப் பரவலாக் கலை இலங்கையில் அறிமுகப்படுத்துவது குறித்து இன்றைய கூட்டத்தில் ஆராயப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டம் குறித்து ஏகமனதான முடிவு ஒன்றைத் தெரிவுக் குழு எட்டாவது என அவதானிகள் கருத்து வெளியிட்டனர்

(உ)

## ஒளவை விழா

யாழ்ப்பாணம். மார்ச் 11

கந்தர்மடம் ஆத்திசூடி வீதியில் உள்ள சித்தி விநாயகர் ஆலயத்தில் இரண்டாவது ஆண்டாக ஒளவையார் விழா எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

(க)

## POSTGRADUATE DIPLOMA IN PUBLIC ADMINISTRATION

Receiving of Applications for admission to the Postgraduate Diploma in Public Administration has been extended to 1993-03-16

Applicants should have adequate proficiency in English to follow the course.

This is a one year full - time course. Lectures will be conducted on Saturdays and Sundays and in the evenings on selected week - days The course is fee levyings. Candidates should sit an aptitude test/oral, which is tentatively fixed for 1993 - 04 - 03. Graduates or those who have professional qualifications equivalent to a degree are eligible to apply Prospectus and application forms are available with Senior Assistant Registrar, Academic Branch, University of Jaffna on payment of Rs. 25/-.

- REGISTRAR.

University of Jaffna.
1993 – 03 – 10

(C-4667)

## கட்டடத்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல கோரிக்கைகள் அடங்கிய மகஜரையே அவர்கள் கையளித்தனர். அந்த மகஜரில்—

★ எதுவித நிபந்தனையும் இன்றி சங்குப்பிட்டியில் உள்ள இராணுவத்தை வாபஸ் பெற்று பூநகரிப் பாதையை பொதுமக்களின் பாவனைக்குத் திறந்துவிடவேண்டும்.

★ பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ள குடாநாட்டு மக்களுக்கு குறைந்தது ஒருமாத காலத்துக்கு உலர் உணவு நிவாரணம் வழங்கவேண்டும்.

★ சகலவிதமான மருந்துப் பொருள்களும் எவ்வித தட்டுப்பாடும் இன்றிப் பெற வழிவகை செய்யவேண்டும்.

★ தேவையற்ற யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் அரசு ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டும்.

★ குண்டு வீச்சுக்களை நிறுத்தவேண்டும்.

★ தபால்கள் உடைக்கப்படும் மனித உரிமை மீறல் செயல் நிறுத்தப்படவேண்டும்.

என்பவை உட்பட பல கோரிக்கைகள் இடம்பெற்றிருந்தன.

(உ-5 162)

## இடைத் தேர்தல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மௌனத்தையே ஒரு அனுமானமாக எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. அதனால் இந்த காங்கிரஸ் — அ. தி. மு. க. கூட்டு முறிகிறது. அ. தி. மு. க. அரசின் ஊழல் நடவடிக்கைகள் பற்றி அறிக்கை தயாரிப்பதாக தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கூறியுள்ளார்.

இதுபோல பல்வேறு மாநிலங்களிலும் உள்ள காங்கிரஸ் தலைவர்கள் அ. தி. மு க. அரசை இழித்தும் பழித்தும் பேசி வருகின்றார்கள். ஆகையால் இந்தக் கூட்டு முறிந்துவிட்டது.

இவ்வாறு செல்வி ஜெயலலிதா தெரிவித்தார்.

(ஓ-எ)

## திருத்தம்

நேற்றைய (10 – 3 – 93) உதயன் நான்காம் பக்கத்தில் பிரசுரமான முத்தையா நடராசாவின் மரண அறிவித்தலில் —

விலாசம் பின்வருமாறு அமைந்திருக்க வேண்டும்:

No: 2, Inner Fairline Road, Dehiwala, Colombo

திருத்தி வாசிக்கவும்

## சுத்தம் கூடினால் ஆபத்தா?

# சிங்கப்பூர் மக்களுக்கு தீவிர தொற்று நோய்கள்!

சிங்கப்பூர், மார்ச் 11

சுகாதார வாழ்க்கை முறைக்கும் ஆரோக்கியமான ஒழுக்க நெறிக்கும் பிரசித்திபெற்ற சிங்கப்பூரில் தற்போது மோசமான தொற்று நோய்கள் பரவி வருவதாக ''ஸ்ரெயிற்ஸ் ரைம்ஸ்'' ஆங்கிலத் தினசரி செய்தி வெளியிட்டுள்ளது

சிங்கப்பூரில் மக்கள் சுகாதாரத்தை தீவிரமாகப் பேணி வருவதே இதற்குக் காரணம் என்று அந்தப் பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது.

சிங்கப்பூரில் செங்கண்மாரி கூகைக்கட்டு, பொக்குளிப்பான் முதலிய நோய்கள் கடந்த ஆண்டு அதிகரித்துள்ளன என்று சிங்கப்பூர் சூழல் அமைச்சின் புள்ளி விவரங்கள் காட்டுவதாக அந்தச் செய்தி கூறுகிறது.

சிங்கப்பூரில் ஒரு முழுச் சந்ததி மக்கள் நோய்களைக் காணமலே வளர்ந்துள்ளார்கள். இதனால் அவர்களுடைய நோய்த் தடுப்புச் சக்தி குறைந்துள்ளது இதுவே தற்சமயம் பெருவாரி நோய்கள் ஏற்படக் காரணகும் எனக்கருதப்படுகிறது என்றும் செய்தியில் குறிப்பிடட்ப்படுள்ளது.

(ஒ-க-இ)

## நஷ்டம்

அண்மையில் பருவம் தவறிப் பெய்த மழையினால் தென்மராட்சிப் பகுதியில் தோட்டப் பயிர் எல்லாம் நோய் பிடித்துப் பாழாகியுள்ளன.

இதனால் விவசாய மக்கள் பெரிதும் நஷ்டமடைந்துள்ளனர்.

(க-ரி)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 17 — 04 — 1955
நிறைவு: 09 — 02 — 1993

### அமரர் வி. விஜயபாலன் (பாலன்)

சங்கானை தேவாலய வீதி திரு விஜயரத்தினம் தம்பதிகளின் மூத்த புதல்வன் அமரர் விஜயபாலன் அவர்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனை என்றும் பிரார்த்திப்போம்.

பிரிவால் துயருறும்;
- குடும்பத்தினர்.

''விஜய பவனம்'',
தேவாலய வீதி, சங்கானை

(சி-4710)

## மரண அறிவித்தல்கள்

### சின்னப்பு கதிரவேலு

அம்பன், குடத்தனையைச் சேர்ந்த சின்னப்பு கதிரவேலு 10-03 93 இல் காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற பார்வதியின் அன்புக் கணவரும், விக்னேஸ்வரன், தங்கவேலாயுதம், சிவச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தையா, கிருஷ்ணபிள்ளை, ஆறுமுகம், சின்னத்தம்பி, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (11-03-93) காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அம்பன் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சின்னத்தம்பி
(சகோதரன்)

மயிலணி,
சுன்னாகம்.
(24813)

### கிருஸ்ணபிள்ளை இரட்ணகோபால்

புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை இரட்ணகோபால் நேற்று (10-3-93) புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

இவர் புவனேஸ்வரியின் (அமெரிக்கா) அன்புக் கணவரும், ஜெயக்குமார் (அமெரிக்கா), ஜெயரஞ்சினி (அமெரிக்கா), ஜெயபூரணபாலா (லண்டன்), ஜெயசூரியா (அமெரிக்கா), ஜெயராணி (சுவீடன்), ஜெயவதனா (சுவீடன்), ஜெயச்சந்திரன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நேற்று [10-3-93] புதன்கிழமை இல. 12A, கந்தப்புராண வீதி, கந்தர்மடத்தில் நடைபெற்று, பூதவுடல் மாலை 5 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல் :
ச. கதிரவேலுப்பிள்ளை
(மச்சான்)

(24812)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11-03-1993இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org